# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 061 /2016/பேரூராட்சி

ஆணை எண்: 103 /2016

நாள்: 31 / 05 /2016

பொ.ராஜேந்திரன்,
த/பெ.பொன்னுசாமி (லேட்),
வார்டு எண்.10, பெத்தான் நஞ்சப்ப முதலி தெரு,
தாரமங்கலம் (அஞ்சல்), ஓமலூர் (வட்டம்), சேலம் மாவட்டம்.
பின்கோடு–636 502 — மனுதாரர்

செயல் அலுவலர்,
ஜலகண்டபுரம் பேரூராட்சி,
சேலம் மாவட்டம் – 636 501 — எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், தாரமங்கலம் திரு.பொ.ராஜேந்திரன், என்பவரது 28.01.2016 நாளிட்ட, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனு தாக்கல் வழிமுறை , விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015–ன் படியான முறையீடு 01.02.2016 அன்று முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 061/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு தொடர்பாக தாரமங்கலம் செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை பெறப்பட்டு அவ்வறிக்கையின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், ஜலகண்டபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு,ப.அண்ணாமலை 01.02.2003 முதல் 10.07.2005 முடிய பணியாற்றிய காலத்தில் குடிநீர் விநியோகப் பைப் லைன்கள் பணிக்காக,

ஜலகண்டபுரம் திருவள்ளுவர் நகர கூட்டுறவு வங்கி காசோலை புத்தக அடிக்கட்டையில் தர்மராஜ் என்னும் பெயரும் காசோலையில் 'தன் காசோலை' (Self) எனவும் எழுதப்பட்டு திருவள்ளுவர் நகர கூட்டுறவு வங்கியில் இருந்து பணம் எடுத்துள்ளதாக தாரமங்கலம் திரு.பொ.ராஜேந்திரன் என்பார், தெரிவித்த புகார் மனு தொடர்பாக செயல்அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது.

09.05.2016 நாளிட்ட செயல் அலுவலர் கடிதத்தில் அப்போதைய செயல் அலுவலர் திரு.ப.அண்ணாமலை இப்பேரூராட்சியில் பணிபுரிந்து பின்னர் வேறு பேரூராட்சிகளில் பணிபுரிந்து 30.06.2010 ஆம் ஆண்டு பணி ஒய்வு பெற்றுள்ளார். மனுதாரரின் புகார்கள் தணிக்கையில் சுட்டிக்காட்டப்படவில்லை என்றும், மனுதாரர் திரு.ராஜேந்திரனும், புகார்தாரர் திரு.அண்ணாமலையும் ஒன்றாக பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தற்போது புகார் தெரிவித்துள்ளார் எனவும் இந்நிகழ்வு 11 வருடத்திற்கு முந்தைய காலத்திற்கு முன்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விதிகள் 10 (3) (C) ன்படி இப்புகார் மனு 5 ஆண்டுகள் காலம் கடந்தது என்ற தன்மையில் இம்முறை மன்றம் இப்புகார் மனுவை தள்ளுபடி செய்து ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திரு.பொ.ராஜேந்திரன்,
த/பெ.பொன்னுசாமி (லேட்),
வார்டு எண்.10, பெத்தான் நஞ்சப்ப முதலி தெரு,
தாரமங்கலம் (அஞ்சல்),
ஓமலூர் (வட்டம்), சேலம் மாவட்டம்.
பின்கோடு–636 502

2. செயல் அலுவலர்,
ஜலகண்டபுரம் பேரூராட்சி,
சேலம் மாவட்டம் – 636 501